**சமூகப்பணி ஓர் தூதுப்பணி**

**முன்னுரை**

“நாம் வாழும் உலகம் பல உறவுகளின் இணைப்பினால் சுழன்று கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் ஒன்றிணைந்து குடும்பங்களை உருவாக்குகின்றனர். ஒவ்வொரு குடும்பங்களும் இணைந்து சமூகங்களை உருவாக்குகின்றன. பல சமூகங்களால் உருவாக்க படுபவைகளாக தேசங்கள் காணப்படுகின்றன. இத்தேசங்களில் வாழும் மனிதர்கள் சமூகப் பிராணிகளாகவும் சமயப்பிராணிகளாகவும் காணப்படுகின்றனர் என **திஸ்ஸபால சூரிய** கூறுகின்றார்.”[1] ஏனெனில் ஆசிய தேசத்தில் உருவாகிய மதத் தலைவர்கள் திருமறை கூறும் அனைவரும் சமூக தலைவர்களாகவே காணப்பட்டனர். அதாவது சமூக மக்களின் விடுதலைக்காக அவர்கள் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றி வந்ததன் விளைவாகவே அவர்கள் சமயத் தலைவர்களாக வரலாற்றில் மாற்றப் பெற்றனர். இதனொளியில் சமூகப் பணியே மக்களை சமயத் தலைவர்களாக உருமாற்றியுள்ளது. இதனை மையமாகக் கொண்டே திருமறையில் பழைய புதிய ஏற்ப்பாடுகள் சமூகப் பணி பற்றி எவற்றை எடுத்துக்கூறுகின்றதென இவ் ஆய்வுக் கட்டுரையில் ஆராய விரும்புகின்றேன். குறிப்பாக சமூகப்பணி, திருமறை கூறும் சமூகப்பணி, நாம் சமூகப் பணியை ஏன் ஆற்ற வேண்டும், சமூகப்பணி ஆற்றும் போது கவனிக்கப்படவேண்டியவைகள் போன்ற இலக்குகள் போன்றவைகளில் எனது ஆய்வினை மேற்கொள்ள விரும்புகின்றேன்.

**சமூகப்பணியின் முக்கியத்துவம்**

“திருமறையிலும் இலக்கியங்களிலும் பிறசமயங்களிலும் சமூகப்பணியின் மேன்மையைக் குறித்து நாம் படித்தறிகின்றோம். குறிப்பாக மக்கள் சேவை மகேசன் சேவை எனக் கூறுவதனூடாக சமூகப்பணி இறைவனுக்கு ஆற்றும் ஓர் தொண்டு என வரைவிலக்கணப்படுத்தப் படுகின்றது. அதாவது ஓர் தனிமனித வாழ்வில் அல்லது குடும்ப வாழ்வில் அல்லது சமூக வாழ்வில் நாம் செய்யும் பணி அல்லது சேவை பிறருடைய வாழ்க்கையில் சிந்தனையில் செயற்பாட்டில் நேரடியாகவோ இல்லையேல் மறைமுகமானதாகவோ நேர்த்தாக்கத்தை ஏற்ப்படுத்துவதே சமூகப்பணியாகுமென **சுகிர்தராஜா** கூறுகின்றார்”[2] இதன்படி சமூகப்பணி மனித வாழ்வை மேம்படுத்தும் ஓர்பணி என கூறப்படுகின்றது. மேலும் ‘வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்’ என்ற வள்ளுவரின் இலக்கிய திருக்குறள் கூற்று நாம் சமூகத்தில் இம்மையில் ஆற்றும் சமூகப்பணி மறுமையில் எமக்களிக்கும் மேன்மையை எமக்கு எடுத்துக் காண்பிக்கின்றது. மகாபாரதத்தில் கர்ணன் தனது மரணத்தருவாயிலும் கூடதனது அறக்கொடை வாழ்வை அனுபவித்து மகிழ்ந்தார் என்பதை உற்று நோக்கும்போது நாம் பிறருக்கு ஆற்றும் பணி உயிரிலும் மேலானது என்பதை எமக்கு எடுத்துக் காண்பிக்கின்றது. “இஸ்லாம் மதத்தில் குவ்யா என்ற பாரம்பரிய ஏடு நாம் சமூகத்திற்கு ஆற்றும்பணி எம்மை சமூக மீட்புத் திட்டத்தில் இணைக்கின்றது எனக் கூறுகின்றது.”[3]“பௌத்த மதத்தில்ஓர் மனிதன்பூரண நிர்வாண நிலையை அல்லது மீட்பு நிலையை அடைவது அட்டாங்க சீலங்கள் அல்லது சமூகப்பணியின் முக்கியத்துவத்தைப்பற்றி நாம் பார்க்கலாம்.”[4]இதற்கமைய சமூகப்பணி எல்லா மதங்களாலும் இலக்கியங்களாலும் மதம்சாரா அமைப்புக்களாலும் போற்றப்பட்டும் ஆற்றப்பட்டும் வருகின்றது.

•

**சமூகப்பணி பற்றி திருமறை கூறும் சிந்தனைகள்**

---

[1]Thissa balasuriya.mary and human liberation csr center 1996 pg7

[2]

[3]

[4]

திருமறை சமூகப்பணி பற்றிய பல்வேறு மாதிரிகளையும் அணுகுமுறைகளையும் வகைகளையும் பற்றி பேசுகின்றது.

**1.இறைவன் ஒரு சமூகப்பணியாளர்**

முதலாம் இரண்டாம் ஏற்பாடுகளில் திருமறை ஆசிரியர்கள் இறைவனை ஓர் சமூகப்பணியாளனாகக் காண்பிக்கின்றார்கள். குறிப்பாக "அப்போது ஆண்டவர் கூறியது எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன், அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். ஆம் அவர்களின் துயரங்களை நான் அறிவேன். விடுதலைப்பயணம் 3:7ல்"[5] எகிப்தில் இஸ்ராயேல் மக்கள் அடிமைகளாக இருந்தபோது இறைவன் அவர்கள் அடிமைத்தனக் குரலைக் கேட்டு அவர்கள் கண்ணணீரைக்கண்டு அவர்களை விடுவிக்கும் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார். குறிப்பாக "விடுதலைப்பயணம் 3:1-14வரை உள்ள பகுதியில் இறைவன் மோசேக்கு அளித்த காட்சியில்"[6] வெளிப்படும் எரியும் முட்செடி என்பது எரிந்து கொண்டிருக்கும் மக்களின் துன்ப சூழலின் மத்தியில் கடவுள் தோன்றி அவர்களுடன் இணைந்து துன்பப்படும் காட்சியை திருமறை காண்பிக்கின்றது. இதன்மூலம் விடுதலைப்பணியில் அல்லது மீட்புப்பணியில் முதற்படிநிலையை இறைவன் எடுத்த படியினால் அவரை **அடனோய்** என அழைத்தனர். இப்பெயர் பின்னர் யாவேயாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இவ்விடுதலைப்பணி அனைவருக்குமுரியதாகவும் அனைவரையும் உள்வாங்குவதாகவும் காணப்படுகின்றது."(ஆமோஸ் 9:7)"[7] மேலும் இப்பணியில் இறைவன் எல்லேரையும் அதாவது இன, மத, மொழி வேறுபாடுகளின்றி எவரையும் பயன்படுத்த முடியும். குறிப்பாக"சைரசுக்கு ஆண்டவர் திருப்பொழிவு செய்துள்ளார். பிற இனத்தவரை அவரமுன் அடிபணிய செய்வார். ஆரசர்களை அவர்முன் ஆற்றல் இழக்கச் செய்வார்: கோட்டை வாயில்களை அவர் முன் பூட்டிராது திறந்திருக்கச் செய்வார்.அவரது வலக்கையை உறுதியாகப் பற்றிப்பிடித்துள்ளார்.அவரிடம் அண்டவர் கூறுவது இதுவே ஏசா45:1ல்"[8] பாபிலோனிய அடிமைத்தனத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களை விடுவிக்கும் பணியில் இறைவன் யூதரல்லாத பாரசீக ஓர் மன்னனைப் பயன் படுத்துவது ஓர் அதிர்சிக்குரிய செய்தியாகும். மேலும் கடவுள் தனது விடுதலைப் பணியில் விலைமாதுவாக கருதப்பட்ட இராகாப் என்ற பெண்மணியை பயன்படுத்தியதை நாம் யோசுவா இரண்டாம் அதிகாரத்தில் காணலாம். இதனொளியில் இறைவனால் முன்னெடுக்கப்படும் விடுதலை சார்ந்த சமூகப்பணி எல்லோருக்கும் ஆற்றப்பட வேண்டிய ஓர் பணியாகும். இப்பணியை தொடர்ந்தாற்றுவதற்காகவே இறைவன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். இதன் தொடர் நிலையாக ஆண்டவர் இயேசு திருச்சபையை உலகிற்கு அனுப்பியுள்ளார். இதனை"யோவான் 20:21ல்"[9] நாம் காணலாம். எனவே **வில்லியம் டெம்பர்** என்பவரின் கூற்றுக்கமைய திருச்சபை என்னும் அமைப்பு இறைவனின் இப்பணியை தொடர்ந்தாற்றி தன்னை மக்களின் பிரதிநிதியாக மாற்றிக்கொள்ள வேண்டுமென்கின்றார். மேலும் ஜேர்மனிய இறையியலாளரான **பொன்ஹொபர்** தனது நூலில் திருச்சபை என்ற ஓர் அமைப்பு மாத்திரமே மக்களுக்காக பணி செய்யும் அமைப்பாக மாறி வருகின்றதென்கின்றார். எனவே இவ்வமைப்பு சமூகப்பணியில் துன்பக்கிண்ணத்தை ருசிபார்க்க அழைக்கப்படுகின்றது என்கின்றார். இதனடித்தளத்தில் சமூகப்பணி இறைவனின் பணி என்ற முடிவிற்கு நாம் வரலாம்.

**2. சமூகப்பணியும் சாக்கிரமந்தும்**

இறைவனுடைய அருளை நாம் மறைமுகமாக பெற்றுக்கொள்ளுவதன் அடையாளமாக பல சாக்கிரமெந்துகளில் நாம் கலந்து கொள்கின்றோம். குறிப்பாக பாவஅறிக்கை, திருமுழுக்கு, திடப்படுத்தல், திருவிருந்து, எண்ணெய்பூசி மன்றாடுதல், திருநிலைப்படுத்தல், திருமணம் ஆகியவற்றை உதாரணங்களாகக் கூறலாம். இவைகளினூடாக இறைவன் தன்னை உலகிற்கு வெளிப்படுத்துகின்றார். இதனொளியில் இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையையும் ஓர் அருட்கொடையாக அல்லது சாக்கிரமெந்தாக நான் காண்கின்றேன். ஏனெனில் இவ் இயற்கை இறைவனுக்கே சொந்தமானதாகும். (திருப்பாடல் 24:1) மேலும் இயற்கையினூடாக இறைவன் தன்னை வெளிப்படுத்துகின்றார். (திருப்பாடல்

[5]திருவிவிலியம் பொதுமொழி பெயர்ப்பு
[6]
[7]
[8]
[9]

19:1) மேலும் இயற்கையை பாதுகாக்கும் பணியை இறைவன் எமக்கு முதல் கட்டளையாக கொடுத்துள்ளார்.(தொட2:15) இப்பாதுகாப்புப்பணி ஓர் சமூகப்பணியாகும். ஏனெனில் நாம் இப்பூமியை பாதுகாக்காத பட்சத்தில் மாசடைவுகள் ஏற்ப்பட்டு இயற்கை அழிவுகளையும் பூலோக வெப்பமுறுதலையும் நாம் சந்திக்கவேண்டிய சூழல் ஏற்ப்படுகின்றது.மேலும் அரசாங்க நிலச்சுவீகரிப்புச் சட்டம் காணி சுவீகரிப்புச் சட்டம் போன்றவற்றால் மக்கள் நிலமற்றவர்களாக மாறுவதை நாம் காணலாம்.லேவியர் 25ம் அதிகாரத்தில்நில சமத்துவ சட்டத்தைப் பற்றி திருமறை பேசுகின்றது. மேலும் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை ஆகாப் மன்னன் அபகரிக்க முற்பட்ட போது இதற்கு எதிராக எலியா இறைவாக்கினரின் இறைவாக்குப் பணியை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் உரோமர் 8:22ல் முழுப் படைப்புக்களும் விடுதலைக்காக ஏங்குகின்றதென்பதை பவுல் கூறுகின்றார். இதனொளியில் இயற்கைக்கு ஆற்றவேண்டிய பணியை ஓர் சமூகப்பணியாகவும் சாக்கிரமெந்தாகவும் நாம் கருத வேண்டும்.

### 3. **சமூகப்பணியும் நடுத்தீர்ப்பும்**

தொடக்கநூல் 1:25-26ல் இறை சாயலில் சமத்துவமாக படைக்கப்பட்ட மனுக்குலம் தனது சமத்துவ மனித மாண்பை சமூக, பொருளாதார, அரசியல், கலைகலாசார, மத காரணங்களால் இழந்துவிட்டன. இவ் இழந்துவிட்ட சமத்துவ பண்புகளை மறுபடியும் வெளிக்கொணரும் வகையில் இப்பணி மிகவும் அவசியமாகின்றது. குறிப்பாக பொருளாதார ரீதியில் சமத்துவத் தன்மையை ஏற்படுத்தும் பொருட்டு திருமறை எம்மை அழைக்கின்றது. குறிப்பாக விடுதலைப்பயணம் 21,22,23ம் அதிகாரங்கள் , ஏசாயா 55ம் அதிகாரம் மற்றும் யுபிலி வருட சிந்தனைகள் போன்றவைகள் மேற்கூறிய கருத்தினை வலியுறுத்துகின்றது. மேலும் ஏன் மக்கள் ஏழைகளாக உள்ளார்கள் அவர்களின் சொத்துக்களை சுரண்டி வைத்திருப்பவர்கள் யார் என்ற வினாவை எழுப்புதலும் இங்கு அவசியமாகின்றது.லூக்கா4:16-21மேலும் சமூக அந்தஸ்தை சமூகத்தில் இழந்தவர்களும் மனிதப்பெறுமதி அற்றவர்களாவார். இவர்கள் மட்டில் செயற்பட்டு மனிதப்பெறுமதியை இவர்களுக்கு வழங்குவதும் ஓர் சமூகப்பணியாகும். இதனை திருமறை எமக்கு வலியுறுத்துகின்றது. குறிப்பாக பெண்கள் லூக்கா8:1-3. யோவான்20:1-16,சிறுவர்கள் லூக்கா18:1-5, பிறஆற்றலுள்ளவர்கள் மாற்கு10:46-52 போன்ற பகுதிகளை உதாரணமாக கூறலாம். இத்தகைய சமூகப்பணிகளில் நாம் ஈடுபடுவதனூடாக இறைவனின் நடுத்தீர்ப்பில் இருந்து நாம் தப்பித்துக் கொள்கின்றோம். அதாவது இறுதி நடுத்தீர்ப்பு செயல்களின் அடித்தளத்திலேயே தங்கியிருப்பதை திருமறை கூறுகின்றது.குறிப்பாக நான் பசியாயிருந்தேன் எனக்கு ஆகாரம் தந்தீர்கள் நான் தாகமாயிருந்தேன் எனக்கு தண்ணீர் தந்தீர்கள் நான் ஆடையின்றி இருந்தேன் எனக்கு ஆடை தந்தீர்கள் நான் சிறையிலிருந்தேன் என்னை வந்து பார்த்தீர்கள் போன்ற வார்த்தைகள் சமூகப்பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காண்பிக்கின்றது. மத்25:31-46.இவைகள் அனைத்தும் இரட்சிப்பு அல்லது மீட்பு சமூகப்பணியினூடாகவும் ஏற்ப்படலாம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

### 4. **சமூகப்பணியும் கடவுளின் அடையாளமும்**

அரசியல் என்னும் சொல் பொலிற்றேஸ் என்னும் கிரேக்க சொல்லிலிருந்தே எழுகின்றது. இதன்படி சமூகத்தில் இடம்பெறும் செயற்பாடுகளில் கிறிஸ்தவர் தன்னை விலக்கிக் கொள்ளாமல் அவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல் மிகவும் வேண்டப்படும் ஒன்றாகும். ஏனெனில் இறைவன் உலகை அன்பு செலுத்துகின்றார்யோவான் 3:16. இதனொளியில் உலகில் அமைதியை ஏற்ப்படுத்துவோர் இல்லையேல் அமைதிக்காக உழைப்போர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுகின்றார்கள். தனிமனித வாழ்வில் குடும்பவாழ்வில் தேசிய வாழ்வில் இயற்கை வாழ்வில் ஏற்ப்பட்டுள்ள முரண்பாட்டு சூழல்களின் மத்தியில் அமைதியை ஏற்ப்படுத்துதல் என்பது அவசியமானதொன்றாகும். இத்தகைய பணியில் இன மத வேறுபாடுகளின்றி எம்மால் ஈடுபடமுடியும். இப்பணியை மையமாகக்கொண்டே ஆண்டவர் இயேசுவின் பிறப்பு(ஏசா9:6, லூக் 2:15) பணி ஏசா11:6-9,லூக்10: 1-12, மரணம் லூக்23: 38-47, உயிர்த்தெழுதல் யோவான் 20:19-23 ஆகிய பகுதிகளை படிக்க வேண்டும். தத்தமது தனித்துவங்களை பேணியவர்களாக நீதியுள்ள அமைதியை அடையும் பாதையில் நாம் அதிகம் கடினப்பட வேண்டும்.(திருப்பாடல் 85:10) இன்றைய இலங்கை சூழலில் வாழ்வளிக்கும் நீதி பகிர்ந்தளிக்கும் நீதி போன்றவற்றை அதிகம் வலியுறுத்த வேண்டும். மேலும் இவ் அமைதிபயணத்தில் உண்மைக்கு சான்றுபகரும் முக்கியத்துவம் வலியுறுத்தப் பட வேண்டும். திருதூதர் பணி 2:32-38. அமைதி உண்மையினூடாக வெளிப்படுத்தப்படல் வரவேற்க்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்நீதி வழிபாட்டுடனும் வாழ்க்கையுடனும் தொடர்புபட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம் ஆமோஸ் 5:18-21. வார்த்தையிலில்லாதநீதி,

வழிபாட்டிலில்லாதநீதி ஆகியவைகளில் எத்தகைய பிரயோசனமுமில்லை என்பதை ஆமோஸ் வலியுறுத்துகின்றார்.

போருக்குப்பின்னான இன்றைய இலங்கை சூழலில் இலங்கை திருச்சபைகள் ஒப்புரவாக்கும் பணியை முன்னெடுத்தல் மிக அவசியமாகின்றது. ஏனெனில் இத்தகைய சமூகப்பணியின்றி எம்மால் இறைவனை பூரணமாக வழிபடமுடியாதுமத்5:22-23. இறைவன் இயேசுவை ஒப்புரவாக்கும் பணியை உலகிலே மேற்கொள்ளுமாறு அவரை அனுப்பினார். அப்பணியை நிறைவேற்றுமாறு எம்மிடம் கேட்கின்றார். (11கொரி5:17-20) நாம் அனேக வேளைகளில் நற்செய்திப்பணிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வேளை மத்28:19-20 இவ் ஒப்புரவாக்கல் பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எனினும் இப்பணி இறைவனின் அங்கீகாரம் பெற்ற ஓர் பணி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாசரேத்தூர் இயேசுவின் அறிக்கையின்படி சிறைப்பட்டோருக்கு விடுதலை என்பது மன்னிப்பின்ஊடாகவும் ஒப்புரவின் ஊடாகவும் சிறைக் கதவுகள் மூடப்படுவதன் ஊடாகவும் ஏற்படும் ஒன்றாகும் என திருமறை கூறுகின்றது.

**திருமறை கூறும் சமூகப்பணி மாதிரிகள்**

சமூகப்பணியின் தன்மைகளையும் வகைகளையும் பற்றி திருமறை கூறுகின்ற அதே வேளை இதற்கான மாதிரிகளையும் முன்வைத்துள்ளது.

1. **திருவிருந்து சார்ந்த மாதிரி**

   சமுகப் பணியின் உன்னத மாதிரியாக திருவிருந்து காணப்படுகின்றது. 1கொரி11:25ம் வசனம் வரையுள்ள பகுதியில் திருவிருந்து பற்றிய ஆரம்பக் குறிப்புக்களை பவுல் குறிப்பிடுகின்றார். ஆண்டவர் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அருட்கொடையாக இது காணப்பட்ட போதிலும் நற்செய்திநூல்களைப் பார்க்கிலும் பவுலின் நிருபத்திலேயே இது பற்றிய கருத்துக்கள் முதலில் எழுதப்பட்டுள்ளன. இதன்படி பவுல் குறிப்பிடும் **கொய்னோனியா** என்ற கிரேக்க பதத்தை நாம் உற்று நோக்கும் போது ஓர் முதலாளி தன்னிடமுள்ள பணத்தை ஓர் தொழிலாளியிடம் கொடுத்து இப் பணத்தை உபயோகித்து நீ வியாபாரத்தை செய்து என்னைப் போன்று மேல் எழுந்து வா என்ற அர்த்தத்தைக் குறிப்பிடும் ஓர் விளக்கமாக இத்திருவிருந்து காணப்படுகின்றது. இதனொளியில் எம்மிடம் இருப்பவைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை இம்மாதிரி உணர்த்துகின்றது. மேலும் நாம் பந்தியண்டை வரும் போது கர்த்தருடைய சரீரம் இன்னதென்று சோதித்துப் பார்த்தல் அவசியமென பவுல் கூறுகின்றார். இதன்படி கர்த்தருடைய சரீரம் என்பது திருச்சபையை குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் ஓர் பதமாகும். அதாவது நாம் திருவிருந்தைப் பெற வருகின்றபோது எம்முடன் பந்தியில் இருப்பவரை நான் எனது நிலைக்கு உயர்த்துவேன் என்பதை இறைவனுடன் பொருத்தனை பண்ணும் இடமாக நாம் பார்க்கலாம். அதாவது பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் ரீதியில் எம்மிலும் பார்க்க குறைந்த நிலையில் உள்ளவர்களை எமது நிலைக்கு நாம் உயர்த்துகின்ற உன்னத உடன்படிக்கை நிகழ்வாக இத்திருச்சடங்கு காணப்படுகிறது. எனவே திருவிருந்து எனும் அருட்சாதனத்தை நாம் பெறும்போது அதனுள் பொதிந்துள்ள சமூகப் பொறுப்பை நாம் மறந்து விடக்கூடாது. எனவே சமூகப்பணியின் உன்னத மாதிரியாக திருவிருந்து திகழ்கின்றது.

2. **திருத்துவ மாதிரி**

   திருத்துவம் என்ற எண்ணக்கரு பொதுவாக கி.பி 4ம் நூற்றாண்டில் தோன்றியதொன்று என பொதுவாக ஏற்றுக் கொண்டாலும் இதனுடைய தன்மைகளை முதலாம் இரண்டாம் ஏற்பாடுகளில் நாம் காண்கின்றோம். குறிப்பாக தொடக்கநூல் 1:1-3,தொட1:25-26,ஏசாயா6:1-8,மத்28:19-20,11கொரிந்தியர்13:13 ஆகிய பகுதிகள் திருத்துவத்தைக்குறித்த தன்மைகளை எமக்கு வெளிப்படுத்துகிறது. இங்கு படைப்பாளராகிய தந்தையாம் கடவுள், மீட்பாளராகிய குமாரனாம் கடவுள், தூயஆவியாகிய தூய்மைப் படுத்தும் கடவுள் ஆகியோரின் பணிகளைப் பற்றி திருமறை பேசுகின்றது. திருத்துவக் கடவுள் இன்றும் சமூகத்தில் பணியாற்றிக்கொண்டே இருக்கின்றார். அதே கடவுள் எங்களை சமூகத்தில் புதிய பணிகளை ஆற்றுமாறு பணிக்கின்றார். மேலும் திருத்துவக்கடவுளிடையே எத்தகைய வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் காணப்படுவதில்லை. இதேவளையில் நாமும் எமது பணிகளை ஆற்றும் போது எத்தகைய வேறுபாடுகளையும்

கவனத்தில் கொள்ளுதல் கூடாது. மேலும் திருத்துவக் கடவுள் ஓர் சமூகத்தின் கடவுளாக காணப்படுவதனால் எமது பணிகள் எப்பொழுதும் சமூகத்தை மையப்படுத்தியதாக காணப்படுதல் அவசியமாகின்றது. மேலும் திருத்துவக்கடவுள் சமூகத்தில் தொடர்ந்து செயற்படும் பங்குதாரர் மாதிரியையே முன்வைக்கின்றார். இவைகளின் ஒளியில் சமுகப்பணியின் இன்னுமோர் மாதிரியாக திருத்துவம் காணப்படுகின்றது.

### 3.வெறுமையாக்கல் மாதிரி

பரிசுத்த பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் 2ம் அதிகாரம் 5ம் வசனம் முதல் 11ம் வசனம் வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசுவின் வெறுமையாக்கல் அனுபவத்தைப்பற்றி பவுல் பேசுகின்றார். அதாவது கடவுளுக்கு சமமாக கடவுளோடு இருந்தவர் அனைத்தையும் கை விட்டு மேலிருந்து கீழே இறங்கி வந்து அடிமையின் தாழ்மையின் ருபமெடுத்து மனிதர் சாயலாகி ஒடுக்கப்படுபவருடன் தன்னை அடையாளப்படுத்தினார் என பவுல் பேசினார். இதன் மூலம் ஆண்டவர் இயேசு தன்னை முழுமையாக வெறுமையாக்கினார். இவ்வெறுமையாக்கல் அனுபவமே அவருக்கு பணி செய்யும் அனுபவத்தை வழங்கியிருக்கக் கூடும். அதாவது தன்னிடம் இருந்த தெய்வீகத் தன்மையை முற்றிலும் துறந்ததன் விளைவாகவே மனிதத் தன்மை அவருக்குள் குடிகொண்டிருக்கக் கூடும். இத்தன்மையே அவரை பிறருக்காக அர்ப்பணிக்கத் தூண்டியிருக்கக் கூடும். இதனாலேயே பவுல் ஆண்டவர் இயேசுவை இரண்டாம் ஆதாம் எனவும் நற்செய்தியாளர்கள் மானிடமகன் எனவும் குறிப்பிடுகின்றனர்மாற்கு10:45. எனவே வெறுமையாக்கல் அனுபவ மாதிரி நாம் பிறருக்காக எம்மை அர்ப்பணிக்கவேண்டும், பணிசெய்ய வேண்டும் என்ற உத்வேகத்தை எமக்கு அருளுகின்றது.

### 4.பாதம் கழுவும் மாதிரி

ஆண்டவர் இயேசு தமது சீடர்களின் பாதங்களை கழுவிய சம்பவம் யோவா13:1-10 வரையுள்ள பகுதியில் நாம் காணலாம். இதனொளியில் ஆண்டவர் தன்னை ஓர் பணியாளனாக அடிமையாக உலகிற்கு காண்பித்து ஓர் பணியின் முன் மாதிரியை வைத்துள்ளார். இதன்படி பாலஸ்தீன தேசத்தில் ஓர் அடிமை செய்ய வேண்டிய பணியை இயேசு ஆற்றியதனூடாக தன்னை அடிமை நிலைக்கு உட்படுத்தினார். யாராலும் விரும்பப்படாத ஓர் மாற்றுக் கலசாரத்தை முன்வைத்து ஓர் போட்டியற்ற பணிமாதிரிமுறையை உலகிற்கு சமர்ப்பித்து உள்ளார். இதன்படி ஓர் சமூகப்பணியில் ஓர் பணியாளன் மாற்றுக் கலாசார தன்மையையும் போட்டியற்ற தன்மையையும் தன் உள்ளத்திலே இருத்திக் கொள்ள வேண்டும்.

### 5. யுபிலி மாதிரி

பழைய ஏற்ப்பாட்டில் யுபிலி வருடம் அல்லது விடுதலையின் வருடம் பொதுவாக அனுட்டிக்கப்படும் இந்நாட்களில் கடன் பெற்றோர் கடனை திருப்பிக்கொடுக்க முடியாத சூழல் ஏற்ப்படுகின்றபோது நிலம் குத்தகைக்கு விடப்பட்டு ஓய்வு கொடுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைகள் முன்வைக்கப்பட்டு மக்கள் வாழ்க்கையில் விடுதலை சிந்தனை யுபிலி நிகழ்வினூடாக விதைக்கப்படுகிறது. மேலும் இவ்வாறு பணிகள் நடைபெறுகின்ற போது ஓய்வு நாட்கொள்கை விடுதலை சார்ந்த ரீதியில் விளக்கப்படுவதை இணைச்சட்டம் 5ம் அதிகாரத்தில் நாம் படிக்கின்றோம். அதாவது தொழிலாளர்கள் மிருகங்கள் போன்றவற்றிற்கு அளிக்கப்படவேண்டிய ஓய்வு நிலையைப் பற்றி நாம் இங்கு குறிப்பிட வேண்டும். எனவே இவ் யுபிலி அல்லது அனுக்கிரக வருடம் எப்போது வருமென ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். எனவேதான் ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்வில் ஒவ்வொரு வருடமும் யுபிலி வருடமாக அமைய வேண்டுமென ஆண்டவர் இயேசு குறிப்பிடுகின்றார். இதன் மூலம் சமூகப்பணி ஓர் குறிக்கப்பட்ட ஓர் காலத்திற்கு செய்யும் ஓர் பணியாக அமைந்து விடாது ஒவ்வொரு நிமிடமும் தொடரப்பட வேண்டியதொன்றாக காணப்படுகின்றது.

6. **பத்துக்கட்டளை மாதிரி**

இஸ்ராயேல் மக்களின் அடிமைத்தன விடுதலை இறை பராமரிப்பு செங்கடல் கடத்தல் சீனாய் மலை உடன்படிக்கை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக பத்துக் கட்டளை காணப்படுகின்றது. இதில் முதல் நான்கு கற்பனைகளும் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள தொடர்பையும் மிகுதி ஆறு கற்பனைகளும் மனிதனுக்கும் சக மனிதனுக்கும் இடையே நிலவ வேண்டிய சமூகபொறுப்பின் தன்மையையும் சமூக உத்தரவாதத்தின் தன்மையையும் எமக்கு எடுத்துக் காண்பிக்கின்றது. ஆண்டவர் இயேசு இக்கற்பனைகளின் சுருக்கத்தை மாற்கு 12:28-30வரை உள்ள பகுதியில் எடுத்துக் காண்பிக்கின்றார். மேலும் மத் 5,6,7ம் அதிகாரங்களில் காணப்படும் மலைப் பொழிவு பிரசங்கம் பத்து கட்டளைகளின் இன்னுமோர் விளக்கத் தொகுப்பாக காணப்படுகின்றது. இவைகளனைத்தும் பிறர்மட்டில் நாம் ஆற்ற வேண்டிய அரசியல், பொருளாதார, சமூக, அற, கலைகலாசார செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்துக் காண்பிக்கின்றது.

6. **சிலுவை மாதிரி**

கிறிஸ்தவ வாழ்வின் மையமாக விளங்குவது சிலுவையாகும். இச்சிலுவை எங்களை நாங்கள் வெறுக்க வேண்டியதன் அவசியத்தையும் பொதுநலத்தை குறித்து சிந்திக்கவேண்டியதன் தேவையையும் எமக்கு வலியுறுத்திக் காண்பிக்கின்றது. கலாத்தியர் 6:14ல் பரிசுத்த பவுல் நாமல்ல எமது பணிகளல்ல மாறாக சிலுவையே மக்களுக்குத் தெரிய வேண்டுமென கூறுகின்றார். இதனொளியில் எமது பணி மாதிரிகளில் நாங்களல்ல மாறாக எமது பணிகளே மக்களுக்குத் தெரியவேண்டும். எனவே ஆண்டவர் இயேசு யூதமதத்திலும் உரோம அரசியலிலும் காணப்பட்ட சீர் கேடுகளை சுட்டிக்காட்டியதன் விளைவாக அவரது சிலுவை மரணம் ஏற்ப்பட்டது. அதாவது மதத்தினதும் அரசியலினதும் தூய்மைக்காகவே இயேசுவின் மரணம் ஏற்ப்பட்டதெனலாம். எனவே சிலுவை ஓர் சமூக பணியின் உன்னத மாதிரியாகும்.

**நாம் சமூகப்பணி ஆற்றும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள்**

இறைவன் எம்மை அழைத்து சமூகத்தில் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றுமாறு பணித்துள்ளார் எனவே இத்தகைய பணிகளை நாம் ஆற்றும்போது எவைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டுமென்பதை திருமறை ஆதாரங்களின் உதவியுடன் அவதானிப்போம்.

1. **பணிகொள்வதல்ல பணிசெய்வதே அவசியம்**

எமது பணிகளில் நாம் அனேக சந்தர்ப்பங்களில் பணிகொள்வதைக் குறித்து சிந்திக்கின்றோம். அதாவது பிறரிடமிருந்த பணிகளை நாம் எப்படிப் பெற்றுக்கொள்கிறோம் என்பதல்ல மாறாக அந்தப் பணிகளுக்கு மாறாக நாம் எதைச் செய்கின்றோம் என்பதே முக்கியமாகும். அதாவது சமூகப்பணி எத்தகைய முறையில் ஆற்றப்படுகிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவேதான் ஆண்டவர் இயேசு மாற்கு 10:45ல் மானிடமகன் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அதற்காக அனேகரை மீட்கும் பொருட்டு தன் உயிரையும் கொடுக்க வந்தேன் என கூறிய வாக்கியத்தை எமது சமூகப்பணிகளில் நாம் எமது இதயத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

2. **பிரதிவிளைவு எதிர்பாராத்தன்மை**

பொதுவாக மானிட வாழ்வில் நாம் பணிகளை ஆற்றும் போது சில சந்தர்ப்பங்களில் அதனால் எமக்கு கிடைக்க உள்ள நன்மைகள் எவைகள் இல்லையேல் அப்பணிகளை மையமாக வைத்து நாம் அடையப்போகும் இலக்குகள் எவை? போன்றவற்றைக் குறித்து நாம்

சிந்திக்கின்றோம். ஆனால் உண்மையான பணி எத்தகைய மறைமுக இலக்குகளையும் கொண்டிருத்தல் கூடாது. குறிப்பாக மாற்கு 7:27-30ம் வசனம் வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசு கானானியப்பெண்மணியின் மகளை குணமாக்கும் சம்பவத்தை நாம் படிக்கின்றோம். இப்பெண்மணி யூதப் பெண்மணியாக இல்லாத போதிலும் ஆண்டவர் இயேசு இவளுக்கு சுகத்தை வழங்குகின்றார்.எனினும் சுகம்பெற்றபின்னர் இவளை யூத மதத்தை பின்பற்றுமாறு ஆண்டவர் இயேசு திணிக்கவில்லை. பணியை வழங்கினாரே தவிர மதமாற்றமென்கிற பிரதிவிளைவை குறித்து அவர் சிந்திக்கவில்லை. அனேக சந்தர்ப்பங்களில் நாம் சமூகப்பணியை ஆற்றும் போது அப்பணியின் மூலம் எத்தனை பேரை மதமாற்றம் செய்யலாமென்பதையே இலக்காகக்கொண்டே செயற்படுகிறோம். இது ஓர் தவறான அணுகுமுறையாகும்.

### 3. பணியில் இறைவனின் இடம்

எமது சமூகப்பணிகளில் நாம் பொதுவாக தனிமனிதரையோ நிறுவனத்தையோ அல்லது ஓர் குறிப்பிட்ட திருச்சபையையோ மையமாக வைத்து பணியாற்றி வருகின்றோம். எமது பணிகளில் மேற்குறிக்கப்பட்டவைகளையே பிறருக்கு காண்பிக்க முற்படுகின்றோம். மாறாக இறைவன் இப்பணிகளில் இருக்கிறார் என்பதை நாம் பிறருக்கு காண்பிப்பதில்லை. ஆனால் மத்11:2-6வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசுவிடத்தில் திருமுழுக்கு யோவான் தனது சீடர்களை அனுப்பிய வேளையில் இயேசு சீடர்களை நோக்கி இதோ பார்வையற்றொர் பார்வை பெறுகின்றனர், தொழுநோயாளர் குணமடைகின்றனர், முடவர் நடக்கின்றனர் போன்ற வார்த்தைகளைப் பேசுகின்றார். அதாவது பணியை நான் செய்கிறேன் என இயேசு கூறாமல் மாறாக யாரோ ஒருவர் அதாவது கடவுள் இவைகளை செய்கின்றார் என இயேசு கூறுவது பணிகளில் கடவுளை பிறருக்கு காண்பிப்பதை எமக்கு எடுத்துக் காண்பிக்கின்றது.

### 4. பணிகள் விளம்பரங்களல்ல

சமூகப்பணிகளில் பெருமளவு பணிகள் விளம்பரங்களாக மாறிவிடுகின்றன. எம்மைப்பிரபல்யப்படுத்தும் முறைமைகளாகவும் நாம் இவற்றைப் பயன்படுத்துகிறோம். ஆனால் ஆண்டவர் இயேசு இத்தகைய விளம்பர அணுகுமுறைகளை அடியோடே அழிக்கின்றார். குறிப்பாக லூக்கா 18:9-14வரையுள்ள பகுதியிலும் மத்தேயு 6:1-6வரையுள்ள பகுதியிலும் நாம் பணிகளை ஆற்றும் போது அவைகளில் பேணப்பட வேண்டிய இரகசியத்தன்மைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 5. சமூகப்பணியும் நற்செய்திப் பணியும்

திருத்தூதர்பணிகள் 6:1-6வரையுள்ள பகுதியில் ஆதித் திருச்சபை முகம் கொடுத்த ஓர் பிரச்சனையைப் பார்க்கின்றோம். அதாவது எபிரேய மொழி பேசிய யூதர்கள் கிரேக்க மொழிபேசிய விதவைகளை சரிவர விசாரிக்க வில்லை. இத்தகைய பிரச்சனையை திருச்சபை திருத்தூதுவரிடம் கூறியபோது திருத்தூதுவர்கள் நற்செய்தியை அறிவிப்பது எமது பணியாகும் எனவே சமூகப் பணியாற்றுவதற்கென ஒரு குழுவினரை ஏற்ப்படுத்துவோம் எனக் கூறினர். இதனொளியில் ஏழுபேரை உள்ளடக்கிய திருத்தொண்டர்களை ஏற்ப்படுத்தினர். எனவே நாம் சமூகப்பணி ஆற்றும்போது அதற்க்காக பிரத்தியேகமான குழுக்களை உருவாக்குதல் மிகவும் தேவையானதொன்றாகும்.

### 6. சமூகப்பணியும் இறுதியியலும்

பொதுவாக சமூகப்பணியை நாம் ஆற்றும் போது அது நிகழ்கால விடுதலையை மையப்படுத்தியதாக காணப்படுதல் வேண்டும். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் எமது பணிகள் எதிர்கால விடுதலையை கருத்திற் கொண்டு ஆற்றப்படலாம். எனவே தான் நிகழ்கால

விடுதலையை மையப்படுத்தி நாம் ஆற்றும் போது பணியின் உறுதிநிலையை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். அதாவது பிரச்சனைகளால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் தீர்வு காணாமல் பிரச்சனைகளுக்குரிய ஆணிவேரை அடையாளம் கண்டு அதற்கு ஏற்ப தீர்வுகாண்பதே மிகவும் வேண்டப்படும் ஒன்றாகும்.லூக்10:25-37 வரையுள்ள பகுதியில் சமாரியனின் சமூகப்பணி அதிகளவில் பாராட்டப்பட்ட போதிலும் அநீதிக்குக் காரணராகிய கள்வரைப் பிடிப்பது இப்பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வாகும். எனவே சமூகப் பணியில் நிரந்தரத் தீர்வைநோக்கி நகர்வதே மேலானதென திருமறை கூறுகின்றது.

### 7. தேவையான பணியை ஆற்றல்

சமூகப்பணியை ஆற்றும்போது உரியபணியை உரியவருக்கு ஆற்றுதல் வேண்டப்படும் ஒன்றாகும்.இல்லையேல் நாம் ஆற்றும் பணி சரியானவரை சென்றடைய மாட்டாது. எனவே சரியான திட்டமிடல் சமூகப்பணியில் மிகவும் அவசியமாகின்றது.

### சமூகப்பணியைப் பெறுபவர் கவனத்தில் கொள்ள வேண்டியவை

### அ. தியாகமும் இலாபமும்

சமூகப்பணியைப் பெறுபவர் இலாபத்தை மையமாகக் கொண்டு செயற்பட்டாலும் அத்தகைய இலாபம் இன்னனுமொருவரின் தியாகத்தை மறைத்துவிட கூடாது. மாற்கு5:1-19வரையுள்ள பகுதியில் இலேகியோன் என்ற பேய் பிடித்த மனிதனை இயேசு குணமாக்கியதை நாம் பார்க்கின்றோம். இப்பிசாசுகள் மேடுகளிலிருந்த 2000 பன்றிகளுக்குள் சென்றன. இதன்காரணமாக பன்றிகள் தரையில் விழுந்து மரித்துப் போயின. இதனை பார்த்த ஊர்மக்கள் இயேசுவை நோக்கி ஆண்டவரே நீர் இங்கிருந்து சென்றுவிடும் நீர் இருந்தால் எம் பொருளாதாரத்திற்கு கேடு உண்டாகி விடும் எனக் கூறினர். இதனொளியில் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையான இலேகியோனைக் குறித்து அந்த மக்கள் சிந்திக்கவில்லை. மாறாக தங்கள் பொருளாதாரத்தைக் குறித்தே சிந்தித்தனர். எனவே சமூகப் பணியைப் பெறுபவர் தங்கள் தியாகங்களை இலாபங்களால் மூடக்கூடாது.

### ஆ. பெறுதலும் கொடுத்தலும்

சமூகப் பணியைப் பெறுபவர் எப்பொழுதும் பெற்றுக் கொள்பவராக இருக்கக்கூடாது. மாறாக கொடுப்பதற்கும் முன்வர வேண்டும். உதாரணமாக பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எருசலேம் திருச்சபையில் பஞ்சம் ஏற்ப்பட்டபோது அத்திருச்சபைக்கு உதவி செய்யுமாறு எருசலேம் திருச்சபையிலிருந்த உதவி பெறும் அந்தியோகிய திருச்சபையைக் கேட்டுக் கொண்டான். இதன்படி அந்தியோகியத் திருச்சபை உதவி பெறும் திருச்சபையாக மாத்திரமன்றி உதவி வழங்கும் திருச்சபையாகவும் மாறியது.

### இ. சமூகப்பணியும் நல்லொழுக்கமும்

சமூகப்பணிக்கும் நல்லொழுக்கத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது சமூகப்பணியைப் பெறுபவர் அப்பணியினால் தமது வாழ்வில் மாற்றங்களை, முன்னேற்றங்களை அவதானித்தல் வேண்டும். இதன்படி உரோமர் 12ம் அதிகாரத்தில் கூறப்படும் நல்லொழுக்கம் சமூகப்பணியினால் ஏற்பட வேண்டும். அப்பொழுதே சமூகப்பணி பொது வாழ்வையும் மறுருபமாகுதலையும் நமக்குள்ளே ஏற்படுத்தும்.

### ஈ. பயனாளிகளின் பங்களிப்பு

சமூகப்பணியில் பயன்பெறும் பயனாளிகள் எப்பொழுதும் உதவி பெறுபவர்களில் தங்கியிராமல் தமது பங்களிப்பினை வழங்குதல் மிகவும் அவசியமாகின்றது. உதாரணமாக சமாரியப் பெண்

உயிருள்ள தண்ணீரை பெற வேண்டுமேயாகில் அவள் சாதாரண தண்ணீரை இயேசுவுக்கு கொடுக்க வேண்டிய தேவை ஏற்ப்பட்டது. மேலும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசு ஐயாயிரம் பேருக்கு போசிக்க வேண்டுமேயாகில் ஓர் சிறு பிள்ளையின் பங்களிப்பு அவசியமாகத் தேவைப்பட்டது. இதனொளியில் பயனாளிகளின் பங்களிப்பு சமூகப்பணியல் மிக அவசியமாகக் காணப்படுகின்றது.

**சமூகப் பணியாளன் எதிர்நோக்கும் சவால்கள்**

**அ.பணியும் பலமும்**

கடவுளுடைய திருப்பணியை முன்னெடுக்கும் ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். குறிப்பாக ஆண்டவர் இயேசு தமது சீடர்களை நோக்கி நரிகளுக்கு குழிகளும் ஆகாயத்துப்பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு ஆனால் மானிட மகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்கிறார். இதன்படி நரிகள் என்பது ஏரோதியரையும் ஆகாயத்துப் பறவைகள் என்பது உரோமர்களையும் குறித்து நிற்கின்றது. எனவே அரசியல் வாதிகளுக்கு உலகிலே பலங்கள் அதிகமாக உள்ளன. ஆனால் பணியாளனுக்கோ பலமற்ற ஒரு சூழலை ஆண்டவர் இயேசு காண்பிக்கின்றார். இதன்படி ஒவ்வொருபணியாளனும். பலமற்ற ஒரு நிலையை அனுபவிக்கின்றான்.

**ஆ.பணியும் பரமனும்**

பணியாளன் தன் பணியில் கடவுளில் பூரண நம்பிக்கை வைக்க அழைக்கப்படுகின்றான். லூக்கா 10:1-10 ஆண்டவர் இயேசு தமது சீடர்களை நோக்கி உங்கள் பணிகளில் நீங்கள் பொருளாதாரங்களில் மேலல்ல மாறாக கடவுள்மீது உங்கள் நம்பிக்கையை வையுங்கள் என இயேசு குறிப்பிடுகின்றார். எனவே பணிகளில் அல்ல நம்பிக்கை இறைவன் மீது காணப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

**இ. பணியும் கணக்கு ஒப்புவித்தலும்**

மத்தேயு 25:13-33,லூக்கா10:1-10 ஆகிய இரு பகுதிகளும் பணிக்கும் கணக்கு ஒப்புவித்தலுக்கும் இடையே உள்ள தொடர்பை எடுத்துக் காண்பிக்கின்றது. இதன்படி இயேசுவின் சீடர்கள் பணியின் நிறைவில் தமது அறிக்கையை இயேசுவிடம் சமர்ப்பித்து மகிழ்ந்த போது ஆண்டவர் இயேசு அவர்களை நோக்கி உங்கள் பெயர் பரலோகத்தில் பதித்து இருப்பதை குறித்து மாத்திரமே சந்தோசப்படுங்கள் என கூறுகின்றார். எனினும் பணிகளில் கணக்கு ஒப்புவித்தலின் முக்கியத்துவத்தை மாத்திரமே வலியுறுத்த வேண்டுமென்கிறார்.

**ஈ. பணியும் அவமானமும்**

பணிகளில் கிடைக்கும் பரிசு பல சந்தர்ப்பங்களில் அவமானமாகும்.அதாவது அதிக பணிகளுக்குகிடைக்கும் பரிசு இன்னும் பணிகளே ஆகும். பழைய ஏற்பாட்டுத்தலைவர்களும் புதியஏற்ப்பாட்டுத் தலைவர்களும் தமது பணியில் அவமானத்தையே பரிசாகப் பெற்றனர். ஆமோஸ்5:16 தானியேல் 3:15-25 மாற்க்6:1-6, 11கொரிந்தியர்12 போன்ற பகுதிகளை குறிப்பிடலாம்.

**முடிவுரை**

பணிகளுக்கு சொந்தக்காரனாகிய கடவுள் பல பணிகளை ஆற்றுமாறு எம்மை உலகிற்கு அனுப்பியுள்ளார். இப்பணிகளை ஆற்றும்போது பல சவால்களுக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். எனினும் பணிகளை உலகியல் சார்ந்தபணி, ஆன்மீகப்பணி என்றோ சமூகம் சார்ந்தபணி அல்லது சமயம் சார்ந்தபணி என்றோ நாம் பிரித்து விட முடியாது. ஏனெனில் எல்லாப் பணிகளும் சமுதாயத்திலிருந்து எழுந்து சமுதாயத்தை நோக்கி செல்கின்றது எனவே இறையரசின் அடையாளமாக, மாதிரியாக, உபகரணமாக விளங்கும் திருச்சபை தனது பிரதிநிதிகளை இறையரசை நோக்கி உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இறையரசில் மக்கள் வடக்கேயும் கிழக்கேயும் தெற்கேயும் மேற்கேயும் இருந்து வருவார்கள் அங்கே எத்தகைய வேறுபாடுகளும் காணப்பட மாட்டாது. இதனோளியில் பிரிந்து நிற்கும் மக்களை இணைக்கும் பாலமாக சமூகப்பணி காணப்படுகின்றது. எனவே **நேதன் சோல்ட்புறம்** கூறுவதைப்போல் கோட்பாடுகளும் உறுதிக்கோட்பாடுகளும் எம்மைப் பிரித்து நிற்கின்றது. ஆனால் பணிகள் எம்மை இணைத்து நிற்கின்றன.இதனொளியில் இன்றைய இலங்கைச்சூழலில் எமக்கிடையே ஒற்றுமையை ஏற்ப்படுத்த வேண்டுமேயாகில் அவ் ஒற்றுமை பணிகளுக்கு ஊடாகவே ஏற்ப்படும். எனவே கிறிஸ்தவராகிய நாம் சமூகப்பணியின் மேன்மையை உணர்ந்து தனிப்பட்ட நிலையிலும் குடும்ப நிலையிலும் சமூக நிலையிலும் தேசிய நிலையிலும் பணியாற்ற அழைக்கப்பட்டுள்ளோம்.